## அடக்கம் செய்தல்

*அடக்கம் செய்தல் அல்லது மரணித்துவிட்ட ஒருவருடைய உடலை ஃகப்ரில் வைத்து அதன்மீது மண்ணைப்போட்டு மூடுவதும் ஃபர்த்ஜு கிஃபாயா ஆகும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:*

**أَلَمْ نَجْعَلِ ٱلْأَرْضَ كِفَاتًا ﴿٢٥﴾ أَحْيَآءً وَأَمْوَٰتًا ﴿٢٦﴾ (المرسلات:25-26)**

*பொருள்: நாம் பூமியை உயிருள்ளவர்களையும் மரித்தவர்களையும் ஒன்று திரட்டி வைக்கக்கூடியதாக ஆக்கவில்லையா? (அல் முர்சலாத்:25,26).*

*அடக்கம் செய்வது பகலிலும் இரவிலும் செய்யலாம். இரவில் அடக்கம் செய்வது கஷ்டமானதாக இருந்தாலோ அல்லது அனைத்து ஆயத்தப்பணி களும் செய்துமுடிக்க இயலாது என்று இருந்தாலோ பகலிலேயே அடக் கம் செய்வது சிறந்தது. தெரிந்திருந்தும், வேண்டுமென்றே சூரிய உதயம் அல்லது சூரியன் உச்சியில் இருக்கும்போது அல்லது சூரிய அஸ்தமமாகும் நேரங்களில் அடக்கம் செய்யக்கூடாது. இருப்பினும், அடக்கம் செய்வது அதற்கு முன்பாகவே மேற்கொள்ளப்பட்டு இடையில் இந்த நேரங்கள் வந்துவிட்டால் அதனால் தவறு ஏதுமில்லை. இவ்வாறே, இறந்தவரு டைய உடல் அழுகிக்கொண்டிருக்கும் நிலையிலோ அல்லது வேறு ஏதும் எதிர்ப்பாராத விஷயம் நடந்துவிட்டாலோ இந்த நேரங்களில் அடக்கம் செய்யவேண்டியிருந்தால் அதில் தவறில்லை. சடலம் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக ஃகப்ரை ஆழமானதாகத் தோண்டவேண்டும். உடலை ஃகப்ரில் இறக்கும்போது கால் புறமாக இறக்கவேண்டும், இது சுன்னத்தான முறையாகும். இவ்வாறு செய்வது கஷ்டமானதாக இருக்கு மானால் எவ்வகையில் இயலுமோ அவ்வாறு செய்யலாம். ஃகப்ரில் வைத்துவிட்டபின் மய்யித்தின் முகத்தை ஃகிப்லாவின் புறமாகத் திருப்பி விடவேண்டும் மற்றும் அதனை வலதுப் பக்கவாட்டில் படுக்கவைக்க வேண்டும். கஃபனிடப்பட்ட முடிச்சுக்களை அவிழ்த்துவிடவேண்டும். எவர் மய்யித்தைக் ஃகப்ரில் படுக்கவைக்கின்றாரோ அவர் இந்த வாசகத்தைச் சொல்லவேண்டும்.* **بِسم الله وعَلى مِلَّة رَسُول الله**

www.uzairfaldhi.com

*அங்கு கூடியிருப்பவர்கள் குறைந்தது மூன்று கைப்பிடி மண்ணைத் தலை யின் புறமாக போடவேண்டும். அடக்கம் செய்து முடிக்கப்பட்டுவிட்டபின் அங்கேயே நின்று அடக்கம் செய்யப்பட்டவருக்காக துஆ செய்யவேண்டும். ஹஜ்ரத் உத்ஸ்மான் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு மய்யித்து அடக் கம் செய்யப்பட்டுவிட்டபின் இறைத்தூதர் ﷺ அவர்கள் எழுந்து நின்று மக்களைப் பார்த்துக் கூறுவார்கள், நீங்கள் உங்கள் சகோதரரின் பாவ*

மன்னிப்புக்காகவும் அவர் உறுதியுடன் நிலைத்திருக்கவேண்டியும் அல்லாஹ் விடம் துஆ செய்யுங்கள், ஏனெனில், இப்போது அவரிடம் கேள்விகள் கேட்கப்படும் (அபூ தாவூத்). ஃகப்ரின்மீது உட்காருதல், அதன்மீது நடந்து செல்லுதல், தூங்குதல், மல ஜலம் கழித்தல், உட்கார்ந்து சாப்பிடுதல் குடித் தல் ஆகிய அனைத்துமே தவறானதாகும், அவற்றைத் தவிர்க்கவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَأَنْ يَجْلِسَ أَحَدُكُمْ عَلَى جَمْرَةٍ فَتُحْرِقَ ثِيَابَهُ، حَتَّى تَخْلُصَ إِلَى جِلْدِهِ، خَيْرٌ لَهُ مِنْ أَنْ يَجْلِسَ عَلَى قَبْرٍ

பொருள்: *ஒரு ஃகப்ரின் மீது உட்காருவதைவிட ஒருவர் எரியும் நெருப்பின் மீதே உட்கார்ந்துகொள்ளலாம்* (பெரும்பாலான முஹத்தித்ஸீன்கள்).ஒரு பழைய ஃகப்ரில் அடக்கம் செய்யப்பட்டவருடைய எலும்புகள் நிலைத்தி ருக்கும் என்று சந்தேகப்பட்டால் அதனை மீண்டும் தோண்டக்கூடாது, அவ் வாறே, தோண்டப்பட்ட ஃகப்ரில் எலும்புகள் பெறப்பட்டால் அவற்றை உடைக்கவோ நஷ்டப்படுத்தவோ கூடாது, ஏனெனில்., இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள், உயிருள்ள ஒருவருடைய எலும்புகளை முறிப் பதும் இறந்தவருடைய எலும்புகளை முறிப்பதும் பாவச்செயல் என்ற வகையில் ஒரே மாதிரியானவை. (அபூ தாவூத், அஹ்மத், இப்னு மாஜா). தேவைப்படும் நிலையில் அல்லது சரியானது என்று கருதப்பட்டால் அடக் கம் செய்துவிட்ட பின்பும் மய்யித்தை வேறு இடத்திற்கு மாற்றி அடக்கம் செய்யலாம். ஒருவர் இறந்துவிட்டபின் அல்லது அவர் அடக்கம் செய்யப் படும்போது ஒருவர் அழுவாரேயானால் அது இயல்பான ஒன்றே, இருப் பினும், உரத்த குரலுடன் கதறி அழுவதோ, புலம்புவதோ, ஒப்பாரி வைப் பதோ, கதறிக் கூக்குரலிடுவதோ அனுமதிக்கப்பட்டதல்ல. இறைத்தூதர் ﷺ அவர்களுடைய குமாரரான ஹஜ்ரத் இப்ராஹீம் (ர) அவர்களுடைய மர ணத்தின்போது அவர்களுடைய ﷺ கண்கள் கலங்கின, ﷺ அவர்கள் கூறி னார்கள்: கண்கள் கண்ணீர் விடுகின்றன, மனம் துக்கத்திலிருக்கின்றது, ஆனாலும், நாம் நம்முடைய இரட்சகனுக்கு எது விருப்பமானதோ அத னையே கூறுவோம், இப்ராஹீமே,நிச்சயமாக நாம் உம்முடைய பிரிவின் காரணமாக துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றோம் (புக்ஹாரி).

பொருத்தமற்ற செய்யக்கூடாதவற்றைப்பற்றிக் கூறும்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ مِنَّا مَنْ ضَرَبَ الخُدُودَ، وَشَقَّ الجُيُوبَ، وَدَعَا بِدَعْوَى الجَاهِلِيَّةِ

பொருள்: *எவர் தம்முடைய முகத்தின்மீது அடித்துக்கொள்கிறார்களோ, தன்னுடைய சட்டைகளைக்கிழித்துக்கொள்கிறார்களோ மற்றும் அறியாமை*

www.ijzaifalahi.com

*காலத்துச் செயல்களை மீண்டும் செய்துகொண்டிருக்கிறார்களோ, அவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் அல்ல.* (புக்ஹாரி, முஸ்லிம்). ஒருவருடைய மரணம் ஏற்பட்டால் நாம் பொறுமையைக் கடைபிடிக்கவேண்டும் மற்றும் அல்லாஹ்வுடைய முடிவு மற்றும் விதிக்குத் தலை வணங்கவேண்டும், அத்துடன் நம்மால் **இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்** என்று கூறுவதைவிட வேறு ஒன்றும் செய்துவிடமுடியாது. இந்த துஆ ஓதலாம்:

**اللهُمَّ أْجُرْنِي فِي مُصِيبَتِي، وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا، إِلَّا أَخْلَفَ اللهُ لَهُ خَيْرًا مِنْهَا**

பொருள்: *அல்லாஹ்வே, என்னுடைய இந்தத் துக்கத்தை எனக்கான சிறந்த பிரதிபலனாக மாற்றிவிடு, மேலும், எனக்கு இதனைவிடச் சிறந்ததை அளித்தருள்வாயாக* (முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதி).

ஒரு முஸ்லிம் தன்னுடைய சகோதரர் ஒருவர் இறந்துவிட்டால் வீட்டாருடைய துக்கம் குறையும் வகையில் துக்கம் விசாரிக்கவேண்டும். துக்கத்தில் ஆழ்ந்திருப்பவரை அல்லாஹ்வுடைய முடிவு மற்றும் விதிக்குத் தலை வணங்கவேண்டும் என்று கூறவேண்டும் மற்றும் இறந்தவருக்காக இந்தத் துஆ செய்யவேண்டும்.

**إِنَّ لِلَّهِ مَا أَخَذَ، وَلَهُ مَا أَعْطَى، وَكُلٌّ عِنْدَهُ بِأَجَلٍ مُسَمًّى، فَلْتَصْبِرْ، وَلْتَحْتَسِبْ**

பொருள்: *நிச்சயமாக, அவன் எடுத்துக்கொண்டதும் அவன் அருளியதும் அனைத்துமே அவனுக்குரியதே, அல்லாஹ்விடத்தில் ஒவ்வொன்றிற்கான நேரமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆகவே, பொறுமையை மேற்கொள்வீர் மற்றும் பிரதிபலனை எதிர்ப்பார்த்திருப்பீர்.* (புக்ஹாரி, முஸ்லிம்).

இவ்வகையில், ஒருவருக்கு மன நிம்மதி மற்றும் அவர்களுடைய துக்கங்களைப் பகிர்ந்துகொள்வது ஆகியவற்றில் நம்மால் இயன்ற அளவிற்கு நாம் நிச்சயம் செய்யவேண்டும்.

www.uzairfalahi.com

* * *